புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜூலை 25, 2024 • புரட்சி 24 • முழக்கம் 28 • விலை ரூ.3.00



## ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக தமிழ்நாடு அரசு சட்டம் இயற்றுக!

# சென்னையில் கூடிய தலைமைக்குழுவில் முடிவு

*கழகத் தலைமைக்குழு கூட்டம் 19.07.2024 அன்று மயிலாப்பூரில் உள்ள கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.*

*இத்தலைமைக்குழு கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.*

*கூட்டத்திற்கு தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தலைமைக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் கழகத்தின் அடுத்த கட்ட செயல்திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.*

*கழகத் தலைவர், கழகப் பொதுச் செயலாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் கருத்துக்களை, ஆலோசனைகளை குழுவின் முன்பு வைத்தனர். நீண்ட ஆலோசனைக்குப் பிறகு கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.*

- *ஜாதி ஆணவப் படுகொலைகளைத் தடுப்பதற்கு தமிழ்நாட்டு அரசு தனியாக “ஜாதி ஆணவப் படுகொலைத் தடுப்புச் சட்டம்” ஒன்றை நிறைவேற்றுவது அவசியம் என்று தலைமைக்குழு கருதுகிறது. இதனை தமிழ்நாட்டு அரசிற்கு கோரிக்கையாக வைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.*

- *பள்ளி கல்லூரிகளில் ஜாதி, மதப் பாகுபாடுகளைக் களையவும், நல்லிணக்கம் ஏற்படுத்தவும் அரசுக்கு தகுந்த வழிகாட்டுதல்களை வழங்க ஓய்வுபெற்ற நீதிபதி சந்துரு தலைமையில் தனிநபர் கமிஷன் அமைக்கப்பட்டது. இதில் ஆய்வுகளை மேற்கொண்ட நீதிபதி சந்துரு அவர்கள் 20 பரிந்துரைகள் அடங்கிய 650 பக்க அறிக்கையை தமிழ்நாட்டு முதல்வர் ஸ்டாலின் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளார்.*

*இந்தப் பரிந்துரைகளை தமிழ்நாட்டு அரசு உடனடியாக அமுல்படுத்துவது குறித்து தீவிரமாக ஆலோசிக்க வேண்டும் என்று தலைமைக்குழு கேட்டுக் கொள்கிறது.*

- *தமிழ்நாட்டில் அடுத்த தலைமுறை வளரும் இளம் பருவத்தினர் பலர் சிறு வயதிலேயே போதைப் பொருட்கள் பயன்படுத்தும் அவல நிலைக்கு ஆளாகி அவர்களுடைய சுயத்தை இழந்து சமூகத்திற்கு ஆபத்தாக செல்லும் போக்கு அதிகரிப்பதை இத்தலைமைக்குழு கவலையோடு கவனிக்கிறது. இது போன்ற கவலைக்குரிய ஆபத்தான சூழலில் இருந்து அடுத்தத் தலைமுறைகளை மீட்டெடுப்பதற்கு போதைப் பொருள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு பரப்புரைகளை நம் சமூக அரசியல் பரப்புரைகளுக்கு இடையே செய்வது குறித்தும் தலைமைக்குழுவில் ஆலோசனை நடத்தப்பட்டது.*

- *திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்களை கழகத்தின் முன்னணிப் பொறுப்பாளர்கள் அந்தந்த மாவட்டங்களில் நடத்தி களப்பணியாற்றி வரும் கழகத் தோழர்களை நேரடியாக சந்தித்து கழகத்தின் அடுத்த கட்ட செயல் திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்துவது, மாவட்டக் கழகங்களைப் புதுப்பிப்பது என முடிவு எடுக்கப்பட்டது. இக்கூட்டங்களில் கழகத் தலைவர் கலந்து கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது.*

*ஆலோசிக்கப்பட்ட மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெற உள்ள இடம், தேதி ஆகியவை அடுத்த புரட்சிப் பெரியார் முழக்கம் இதழில் அறிவிக்கப்படும்.*

*காலை முதல் மாலை வரை நடைபெற்று இந்த தலைமை குழு கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழகப் பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால்.பிரபாகரன், கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன், சூலூர் பன்னீர்செல்வம், சென்னை இரா.உமாபதி, அன்பு தனசேகர், மயிலாடுதுறை இளையராஜா, அய்யனார், காவை ஈசுவரன் உள்ளிட்ட கழகத் தலைமைக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.*

*கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாத இரண்டு உறுப்பினர்களில், கழக வெளியீட்டுச் செயலாளர் கோபி இராம.இளங்கோவன் தான் கலந்து கொள்ள இயலாததையும், தலைமைக் குழுவில் விவாதிக்க என சில கருத்துகள் ஆலோசனைகளை கடிதம் வாயிலாக அனுப்பியிருந்தார். மேட்டூர் அ.சக்தி தான் வரமுடியாமை குறித்து செய்தி அனுப்பி இருந்தார்.*

## கழகத் தலைவர் மேற்கொள்ளும் சுற்றுப்பயண விவரம்

| வ. எண் | நாள் | நேரம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1 | 04.08.2024 | மாலை | சென்னை |
| 2 | 05.08.2024 | காலை | காஞ்சிபுரம் |
| 3 | 05.08.2024 | மாலை | வேலூர் |
| 4 | 06.08.2024 | மாலை | கிருட்டிணகிரி |
| 5 | 07.08.2024 | காலை | தருமபுரி |
| 6 | 07.08.2024 | மாலை | சேலம் கிழக்கு |
| 7 | 08.08.2024 | காலை | சேலம் மேற்கு |
| 8 | 08.08.2024 | மாலை | ஈரோடு வடக்கு |
| 9 | 14.08.2024 | காலை | ஈரோடு தெற்கு |
| 10 | 14.08.2024 | மாலை | நாமக்கல் |
| 11 | 15.08.2024 | காலை | திருச்சி / பெரம்பலூர் |
| 12 | 16.08.2024 | காலை | கள்ளக்குறிச்சி |
| 13 | 16.08.2024 | மாலை | விழுப்புரம் |
| 14 | 17.08.2024 | காலை | கடலூர் |
| 15 | 17.08.2024 | மாலை | மயிலாடுதுறை பொதுக்கூட்டம் |
| 16 | 18.08.2024 | | திருமணம் + கலந்துரையாடல் |
| 17 | 21.08.2024 | காலை | திருப்பூர் |
| 18 | 21.08.2024 | மாலை | கோவை / பொள்ளாச்சி |
| 19 | 22.08.2024 | காலை | திண்டுக்கல் / தேனி |
| 20 | 22.08.2024 | மாலை | மதுரை |
| 21 | 23.08.2024 | காலை | தஞ்சாவூர் / பேராவூரணி |
| 22 | 23.08.2024 | மாலை | சிவகங்கை |
| 23 | 24.08.2024 | காலை | தென்காசி |
| 24 | 24.08.2024 | மாலை | தூத்துக்குடி |

## பெரியார் பல்கலை துணைவேந்தருக்கு கண்டனம்

**சேலம் பெரியார் பல்கலைக் கழக தொழிலாளர்கள் 77 பேருக்கு கருத்துக்கேட்பாணை வழங்கிய துணைவேந்தர் மற்றும் பதிவாளர் (பொ) விஸ்வநாதமூர்த்திக்கு திராவிடர் விடுதலைக் கழகம் கடும் கண்டனம்!**

**உத்தரவை உடனே திரும்பப் பெற வலியுறுத்தல்!**



**இதுகுறித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட்டுள்ள அறிக்கை :**

சேலம் பெரியார் பல்கலைக் கழகத் துணைவேந்தரின் ஊழல் முறைகேடுகளைக் கண்டித்தும், அரசு இருமுறை அறிவுறுத்தியும் பதிவாளர் மீது பணி இடைநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்காதத் துணைவேந்தரைக் கண்டித்து ஆசிரியர் சங்கம் மற்றும் தொழிலாளர் சங்கங்கள் இணைந்து தொடர் போராட்டங்களைப் பணி நேரத்திற்கு முன்பும் பின்பும் மாணவர்களின் கல்வியைப் பாதிக்காத வண்ணம் அறவழியில் நடத்தின.

இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத துணை வேந்தர் போராட்டம் நடத்திய 77 பேரையும் மிரட்டும் வகையில் காரணக் கேட்பு கடிதம் அனுப்பி உள்ளார். இது போராட்டங்கள் நடத்துவதை ஒடுக்கும் செயலாகும்.

காரணக் கேட்புக் கடிதம் கொடுத்த பதிவாளர் யார் எனில், பதிவாளர் பதவிக்குத் தேர்வான பின்னர் ஆட்சிக் குழுவால் நிராகரிக்கப்பட்ட ஒருவர் தான் பதிவாளர் பொறுப்பு விசுவநாதமூர்த்தி. நிரந்தரப் பதிவாளர் பதவிக்குத் தகுதி இல்லாத ஒருவர் எப்படி பொறுப்புப் பதிவாளராக வரமுடியும்?

எனவே உடனே நிர்வாகம் மற்றும் தமிழக அரசு இந்த உத்தரவினைத் திரும்ப பெற வேண்டும். தொழிலாளர் - ஆசிரியர் விரோதத் துணைவேந்தர் மற்றும் பதிவாளர் (பொ) மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், உரிய அறிவுறுத்தலையும் வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்துகிறோம்.

**கொளத்தூர் மணி,**
**தலைவர்,**
**திராவிடர் விடுதலைக் கழகம்.**
22.07.2024

## தலையங்கம்

# மதச்சார்பின்மையை ஒழித்துக்கட்ட அனுமதியோம்!

அரசியலமைப்பின் முகப்புரையில் இடம்பெற்றிருக்கும் 'மதச்சார்பின்மை' என்ற சொல்லுக்கு வேக வேகமாக முடிவுரை எழுதிக் கொண்டிருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. ‘‘இந்த நாடு இந்துக்களின் நாடு! இந்துக்களின் இராஷ்டிரமாக இருக்க வேண்டும்’’ என்ற சிந்தனையை சித்தாந்தமாக ஏற்றுக் கொண்டிருக்கும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நிகழ்ச்சிகளில் ஒன்றிய அரசு பணியாளர்கள் பங்கேற்கலாம் என அனுமதி வழங்கியிருக்கிறது ஒன்றிய அரசு. காந்தியடிகள் படுகொலையை ஒட்டி விதிக்கப்பட்ட தடையை சுமார் 58 ஆண்டுகளுக்குப் பிறகு நீக்கியிருக்கிறது ஒன்றிய அரசு.

சில நாட்களுக்கு முன்பு, ஜார்க்கண்ட் மாநிலம் விஷ்ணுபூரில் தொண்டர்களிடையே பேசிய ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், ‘‘சூப்பர் மேன் ஆசையோடு சிலர் நிற்பதில்லை. தேவர்கள், கடவுள்கள் ஆகவும் விரும்புகிறார்கள்’’ என்று மோடியை மறைமுகமாகத் தாக்கிப் பேசியிருந்த நிலையில், அடுத்த சில நாட்களிலேயே ஆர்.எஸ்.எஸ். மீதான தடையை நீக்கியிருக்கிறார். இந்தத் தடையை நீக்கியதன் பின்னணியில் பல்வேறு கேள்விகள் இருக்கின்றன. இந்த நாட்டில் சுயமரியாதை, பகுத்தறிவு, சமூக நீதி, பாலியல் சமத்துவம் என மானுட விடுதலையைப் பேசுகிற பல நூற்றுக்கணக்கான இயக்கங்கள் இருக்கின்றன. அரசு ஊழியர்கள் அவற்றில்கூட நேரடியாகப் பங்கெடுக்க இயலாது. ஆனால் இவற்றுக்கெல்லாம் நேரெதிரான ஜாதியவாதத்தை, மதவாதத்தை, மானுட பிளவுவாதத்தை சித்தாந்தமாக ஏற்றுக்கொண்டிருக்கிற ஆர்.எஸ்.எஸ். அமைப்பிற்கு மட்டும் தடை நீக்கப்படுகிறது என்றால், இது உண்மையில் மதச்சார்பற்ற நாடாகத்தான் இருக்குமா?

அதுமட்டுமின்றி ஆர்.எஸ்.எஸ். எத்தகைய பேராபத்தான இயக்கம் என்பதற்கு வரலாற்றில் பல்வேறு நிகழ்வுகள் சாட்சியங்களாக உள்ளன. காந்தியடிகள் கொலையை ஒட்டித்தான் ஆர்.எஸ்.எஸ். இயக்கம் முதன்முதலில் தடை செய்யப்பட்டது. அப்போது முதல் இதுவரை 4 முறை தடை செய்யப்பட்டிருக்கிறது. காமராசரை டெல்லியில் வீட்டோடு எரித்த கொல்ல முயற்சித்ததும் இந்த அமைப்புதான். ஆர்.எஸ்.எஸ். தொடர்புடைய பல்வேறு இயக்கங்கள், நாட்டின் பல்வேறு குண்டு வெடிப்புச் சம்பவங்களோடு தொடர்புடையவையாக உள்ளன. குண்டுவைக்க, ஆயுதங்கள் பயன்படுத்த இந்துத்துவா இயக்கங்கள் பயிற்சி அளிப்பதாக, 25 ஆண்டுகளுக்கும் மேலாக ஆர்எஸ்எஸ் ஊழியராக இருந்த யஸ்வந்த் ஷிண்டே என்பவர் வாக்குமூலமே அளித்துள்ளார். ஆர்.எஸ்.எஸ். நடத்தும் பேரணிகளில் கூட ஆயுதம் கொடுப்பதை வழக்கமாக வைத்திருக்கின்றனர். இஸ்லாமியர்கள், பட்டியல் சமூகத்தினர் மீது இந்துத்துவவாதிகள் நிகழ்த்தும் கும்பல் படுகொலைகளுக்கு எதிராக இதுவரை ஆர்.எஸ்.எஸ். ஒருமுறை கூட வாயைத் திறந்ததே இல்லை.

பொது அமைதிக்கும், சமூக ஒழுங்கும் பேரபத்தான ஆர்.எஸ்.எஸ்.ஸின் கூட்டங்களில் ஒன்றிய அரசு ஊழியர்கள் பங்கெடுக்கலாம் என்பது, அத்தகைய செயல்களை அரசு ஊழியர்களும் செய்யலாம் என ஊக்குவிப்பதாகவே இருக்கிறது. சட்டமே ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சிகளில் பங்கெடுக்க அனுமதித்தால், ஏற்கெனவே இந்துத்துவ சிந்தனை கொண்டிருக்கும் அதிகாரிகளின் மனநிலை இனி என்னவாக இருக்கும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது. அத்தகைய நபர்கள் பணியாற்றும் எல்லைக்குள் ஜாதிய, மதவாத சிக்கல்கள் எழுமானால் நியாயமாக நடந்துகொள்வார்களா என்ற கேள்வி எழுகிறது. ஒருவேளை ஆர்.எஸ்.எஸ். கொள்கையைக் கொண்ட உயரதிகாரியின் கீழ் பணிபுரியும் ஊழியர்கள் அத்தகைய சிக்கல்கள் எழும்போது நியாயமாக நடந்துகொள்ள அனுமதிப்பார்களா? ஏற்கெனவே ஒன்றிய அரசு பணிகளுக்கான தேர்வுகளில் நடைபெறும் முறைகேடுகள் கொத்துக்கொத்தாக அம்பலமாகிக் கொண்டிருக்கின்றன. ஒன்றிய அரசுப் பணிகளில் ஆர்.எஸ்.எஸ். பின்புலம் கொண்டவர்கள் வலிந்துத் திணிக்கப்படுவதாகவும் செய்திகள் வந்துகொண்டிருக்கிறன.

‘‘நாட்டில் அரசு துறைகளில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை சேர்ந்தவர்கள் உயர் பதவியில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்திய ஆட்சி பணியில் அந்த அமைப்பை சேர்ந்த 4,000 பேர் சேர்ந்துள்ளனர். ஆர்.எஸ்.எஸ். அமைப்பு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வில் வெற்றி பெற பயிற்சி அளிக்கிறது. கடந்த 2016-ம் ஆண்டு மட்டும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை சேர்ந்த 626 பேர் இந்திய ஆட்சி பணி தேர்வில் வெற்றி பெற்றனர். நாடு எங்கே சென்று கொண்டிருக்கிறது. இவ்வாறு குமாரசாமி கூறினார்.’’ என்று சில ஆண்டுகளுக்கு முன்பு மோடி ஆட்சியை நோக்கி கடும் விமர்சனத்தை வைத்தவர் குமாராசமி. கர்நாடகாவின் முன்னாள் முதல்வரான இவர், இப்போது ஒன்றிய பாஜக அரசின் கூட்டணியில் அமைச்சராக இருக்கிறார்.

அதேபோல உத்தரப் பிரதேசத்தில் கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தில் 83 இடங்களுக்கு அறிவிப்பு வெளியாகி, பின்னர் நிறுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் அந்த இடங்களுக்கு சத்தமே இல்லாமல் ஆர்.எஸ்.எஸ். பின்புலம் கொண்ட நபர்கள் நிரப்பப்பட்டனர். இதே பாணியில் உத்தராகண்டில் வனத்துறை வேலைகள் ஆர்.எஸ்.எஸ். ஊழியர்களுக்கு அள்ளிக் கொடுக்கப்பட்டது. இந்திய ராணுவத்தில் சேருவதற்கு மாணவர்களைத் தயார்படுத்துவதை பிரத்யேக நோக்கமாக கொண்டுள்ள ஒன்றிய அரசின் சைனிக் பள்ளிகளை நிர்வகிக்கும் பொறுப்பு 62% அளவுக்கு ஆர்.எஸ்.எஸ். சங் பரிவார்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அரசு நிறுவனங்களைக் கைப்பற்றும் பணியை, நீண்டகாலமாக ஆர்.எஸ்.எஸ். சத்தமே இல்லாமல் செய்துகொண்டிருக்கிறது. அத்தகைய ஆர்.எஸ்.எஸ். பேர்வழிகள் அரசுத் துறையில் இருந்து சுதந்திரமாக செயல்படுவதற்கான வழிவகையாகத்தான் ஒன்றிய அரசின் தடைநீக்கம் இருக்கிறது. சிறுபான்மை சமூகத்தினருக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் மட்டுமல்ல, ஒட்டுமொத்த அரசியலமைப்புக்கும் மதச்சார்பின்மைக்கும் விடுக்கப்பட்ட மிகப்பெரிய சவால் இது! இதை முறியடிக்க வேண்டியது ஜனநாயக சக்திகளின் கடமை.

# அமைச்சர் ரகுபதியின் பேச்சுக்கு கழகம் கண்டனம்!

தமிழ்நாட்டின் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, புதுச்சேரியில் நடைபெற்ற கம்பன் விழாவில் கலந்துகொண்டு திராவிட மாடல் ஆட்சிக்கு முன்னோடியே இராமன் தான் என்று பேசியுள்ளார். பெரியார், அண்ணா, கலைஞர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் பேசுகிற சமத்துவம் - சமூகநீதிக் கொள்கையை அன்றைக்கே பேசியவர் இராமன். எனவே இராமன் தான் திராவிட மாடல் ஆட்சிக்கு முன்னோடியாக திகழ்கிறார் என்று பேசியுள்ளார்.

இந்த பேச்சு மிகவும் அதிர்ச்சிகரமான, திராவிட இயக்கத்தின் அடிப்படை சித்தாந்தங்களையே சீர்குலைக்கக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது. மிகவும் அபத்தமான மனுவாத சிந்தனைகளை விதைக்கக் கூடிய ஒரு பார்ப்பன உரை என்றுதான் இவரது பேச்சைக் குறிப்பிட வேண்டும்.

திராவிட மாடல் ஆட்சிக்கும் இராமாயணத்துக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? ஆரியத்தை எதிர்த்து தான் திராவிடமே வந்தது. ஆரியம் கொண்டாடுகிற காவியங்களில் ஒன்று இராமாயணம். அதனால் தான் இந்துத்துவா சக்திகள் இராமனை தேசிய நாயகனாக மாற்றத் துடிக்கிறார்கள். இந்துத்துவா, பார்ப்பனிய சக்திகளுக்கு இராமன் தேசிய நாயகன். ஆனால் திராவிட மாடல் அரசுக்கும் இராமன் தேசிய நாயகனா? அப்படி பேசுகிற ஒருவர் திராவிட மாடல் அமைச்சரவையில் அமைச்சராக நீடிக்கலாமா? என்ற கேள்வியையும் நாம் வேதனையுடன் கேட்க வேண்டி இருக்கிறது.

பெரியார் இராமாயணத்தை எதிர்த்துக் கடுமையானப் பரப்புரைகளை மேற்கொண்டார். திராவிட இன மக்களை அது இழிவுபடுத்துகிறது என்று வீதிதோறும் முழங்கினார். முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேரு, விவேகானந்தர் ஆகியோர் இராமாயணத்தைக் கடுமையாக எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள். பெரியார் இராமன் படத்தை எரித்தார். அண்ணா, கம்பராமாயணம், பெரிய புராணம் ஆகியவை எரிக்கப்பட வேண்டும் என்று ரா.பி.சேதுப்பிள்ளை, சோமசுந்தர பாரதி ஆகியோருடன் நேருக்கு நேர் வாதிட்டார்.

இராவணன் ஒரு “இரக்கமில்லாத அரக்கன்” என்று கம்பன் எழுதிய போது இராவணன் கம்பனைக் கூண்டில் ஏற்றி கேள்வி கேட்கின்ற நாடகத்தை “நீதி தேவன் மயக்கம்” என்ற பெயரில் உருவாக்கினார் அண்ணா. கம்பராமாயணத்தின் ஆபாசங்களை “கம்பரசம்” என்ற பெயரில் அம்பலப்படுத்தினார்.

இராஜகோபாலாச்சாரி கம்பனை தலையில் தூக்கி வைத்துக்கொண்டாடினார். பிராமணர்களுக்கு ஆபத்து ஏற்படும் போதெல்லாம் இராமாயணத்தை எடுத்துப் படியுங்கள் என்று கூறினார். அரசியலில் தோல்வியடைந்த இராஜகோபாலாச்சாரி, கல்கியில் இராமனைப் புகழ்ந்து தொடர் கட்டுரைகளை எழுதினார். அதற்கு பதிலடி தரும் விதமாக மூகாஜி என்ற பெயரில் முரசொலியில் கட்டுரைகளைத் தீட்டினார் கலைஞர்.

இராமாயணம் என்ன கூறுகிறது? சம்பூகன் ஒரு சூத்திரன். அவன் இடைத்தரகர்களான பிராமணர்களை ஒதுக்கி வைத்துவிட்டு நேரடியாக கடவுளை நோக்கி தலைகீழாகத் தொங்கி தவம் செய்தான் என்பதற்காக பிராமணர்கள் இராமனிடன் சென்று இராமா! இராமராஜ்ஜிய ஆட்சியில் பிராமணர்கள் செய்ய வேண்டிய தவத்தை சூத்திரன் செய்கிறானே இது நியாயம் தானா? இதனால் அக்ரகாரத்தில் உள்ள ஒரு வீட்டில் பிராமணக் குழந்தை ஒன்று இறந்துவிட்டது என்று சொன்னவுடன், நேரடியாக வாளை எடுத்துக்கொண்டு சூத்திரனான சம்பூகனை கண்டங்கண்டமாக வெட்டிவிடுகிறான் இராமன் என்று இராமாயணம் கூறுகிறது.

காட்டில் இருந்து திரும்பிய பிறகு அவன் செய்த முதல் நிகழ்வு இதுதான். சூத்திரன் தலை கீழே விழுந்தவுடன் பிராமணக் குழந்தை உயிர் பிழைத்துக் கொண்டது என்று அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

இராமன் அயோத்தியில் இருந்து காட்டிற்குப் புறப்படும் சமயம், தன்னிடம் இருக்கிற பணத்தையும், நகைகளையும், சொத்துக்களையும் பார்ப்பனர்களிடம் கொடுத்துவிட்டுத்தான் காட்டிற்கு சென்றான் என்று வால்மீகி இராமாயணம் கூறுகிறது. பரதன் தன்னை சந்திக்க வந்த போது, பரதா! தன்னுடைய ஆட்சியில் பிராமணர்கள் சௌக்கியமாக உள்ளனரா? அவர்களைப் பகைத்துவிடாதே! அவர்களுடைய சாபம் நம்மை கெடுத்துவிடும் என்று அவர்களைப் பற்றியே விசாரித்தான் இராமன். ஆனால் மக்களைப் பற்றி விசாரிக்கவே இல்லை.

இன்னும் சொல்லப்போனால் திருமாலை விட, சிவ பெருமானை விட, பஞ்ச பூதத்தை விட, உண்மையை விட பிராமணர்களைத்தான் நாம் போற்ற வேண்டும் என்று கம்பர் அயோத்தியா காண்டத்தில் பதிவு செய்திருக்கிறார். அதில் பாடல்களும் இருக்கிறது.

இந்துத்துவா மாடல் இராமனை தேசிய நாயகனாக்குகிறது. ஆனால் திராவிட மாடல் ஆட்சிக்கும் இராமன் தான் முன்னோடி என்று ஒரு அமைச்சர் பேசுகிறார். ஒருவேளை அவர் ஏற்றுக்கொண்ட ஜெயலலிதா இராமனுக்கு கோயில் கட்ட வேண்டும் என்று சொன்ன கருத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு திமுகவில் அமைச்சர் பதவியை பெற்றுக்கொண்டு இந்துத்துவா கொள்கைகளை திராவிட இயக்க கொள்கைகளாக பேசிக்கொண்டிருக்கிருப்பது மிகவும் ஆபத்தான போக்கு.

தமிழ்நாடு முதலமைச்சர் இப்படிப்பட்ட பேச்சுக்களின் மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை அடித்தளம், அதன் அடையாளம் அடியோடு அழிந்துவிடும் அபாயம் உள்ளது என்பதை கவலையோடு சுட்டிக்காட்டுகிறோம்.

விடுதலை இராசேந்திரன்
கழகப் பொதுச்செயலாளர்,
திராவிடர் விடுதலைக் கழகம்

## ஆம்ஸ்ட்ராங் வீட்டில் கழகத் தலைவர்



அண்மையில் பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங், சமூக விரோதக் கும்பலால் படுகொலை செய்யப்பட்டார்.

அவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 20.07.2024 அன்று காலை 10:30 மணியளவில் பெரம்பூரில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அவரது படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அவரை இழந்து வாடும் அவரது துணைவியாருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொண்டார்.

இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கழகத் தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி, மாவட்டக் கழகச் செயலாளர் உமாபதி, கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், வட சென்னை மாவட்ட அமைப்பாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன் உள்ளிட்ட தோழர்கள் உடனிருந்தனர்.

# பார்ப்பனர்கள் பாஜகவை கொண்டாடுவது ஏன்?

**சாவித்திரி கண்ணன்**

”சாதியால் தான் நாடு பின்னடைந்துவிட்டது..., சாதியே கிடையாது..” என பாஜக தலைவர்கள் அடிக்கடி பேசுகிறார்கள்! ஆனால், அக் கட்சிக்குள்ளும், ஆட்சி நிர்வாக கட்டமைப்பிலும் பார்ப்பனர்களின் முக்கியத்துவம் பிரமிக்க வைக்கிறது! பார்ப்பனர்கள் ஏன் பாஜகவை கொண்டாடுகிறார்கள்..? எனப் பார்ப்போம்;

நமது பிரதமர் மோடியோ, ”நாட்டில் இரண்டே சாதிகள் தான் உள்ளனர். ஒன்று ஏழைகள் மற்றொன்று நாட்டை வறுமையில் இருந்து விடுவிக்க பங்களிப்பவர்கள்” என்கிறார்! அதாவது இரண்டாவது தரப்பினர் வசதியானவர்கள் என்பதைத் தவிர்த்து நாட்டை வறுமையில் இருந்து மீட்க பங்களிப்பவர்கள் என்பதன் மூலம் ஏழைகளை நாட்டிற்கு பங்களிக்காதவர்கள் எனச் சொல்லாமல் சொல்கிறார்! உண்மையில் தங்கள் உழைப்பின் மூலம் நாட்டின் அனைத்து நிர்மாணத் தளங்களையும் அவர்களே கட்டி எழுப்பி அதிகம் பங்களித்த போதிலும், ஏழ்மையில் வைக்கப்பட்டுள்ளனர்!

இப்படி எல்லாம் பேசும் பிரதமர் தான், ”நான் மிகவும் பிற்பட்ட சமூகத்தில் இருந்து பிரதமராகி உள்ளேன்” என்றும் சொல்லி உள்ளார். ”தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை செல்வாக்கான சாதி பின்புலத்தில் இருந்து வந்துள்ளார்” என்றும் கூறியுள்ளார்.

CSDS என்ற அமைப்பின் நாடு தழுவிய சமீபத்திய கருத்துக் கணிப்பின்படி, நாட்டின் மொத்த பிராமணர்களில் 82 சதவிகிதத்தினர் பாஜகவிற்கு தான் வாக்களிக்கின்றனர்! ஏன் பிராமணர்களில் பெரும்பான்மையினர் பாஜகவை தலையில் தூக்கி வைத்து கொண்டாடுகின்றனர். இது எப்படி சாத்தியமாயிற்று என்பதைத் தான் இங்கு பார்க்க உள்ளோம்.

மோடியின் சாதி என்பது மோத் – கான்சி சமூகமாகும். இது 1994 வரை உயர்சாதி பட்டியலில் தான் இருந்தது! இதனால் தான் ராகுல்காந்தி கூட, ”மோடி ஓ.பி.சி என்பது ஒரு பித்தலாட்டம்” எனச் சொல்லி உள்ளார்.

2014 ஆம் ஆண்டு பாஜக தலைவர் சுப்பிரமணியசாமி சொன்னதை நினைவுபடுத்துகிறேன். ”எனக்கு தரப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நான் நரேந்திர மோடியை ஒரு பிராமணர் என்கிறேன். ஏனெனில், நான் அவரிடம் பிராமணர்களின் குணாம்சங்களைப் பார்க்கிறேன்” என சொன்னார்.

அந்த வகையில் ஆர்.எஸ்.எஸ் அந்தணர்களால் அடையாளம் காணப்பட்டு, பிராமண சமூகத்தால் முன்னிறுத்தி, சோ, குருமூர்த்தி, எல்.சந்தோஷ் போன்ற பிராமண அறிவி ஜீவிகளின் பிரச்சாரத்தால் வளர்த்து ஆளாக்கப்பட்டு, இன்று ‘தன்னுடைய ஆட்சியே பிராமணர்களுக்கானது எனச் சொல்லாமல், செயலில் சாதித்து வருகிறார் மோடி’ என்பது தான் சமூக ஆய்வாளர்கள் பலரின் கருத்தாக உள்ளது.

“சாதி கிடையாது. சாதி பாகுபாடு என்பதெல்லாம் இல்லவே இல்லை...”என்பதை அடித்துப் பேசுபவர்களை நன்றாக கவனித்து பார்த்தோமானால், அவர்கள் அனைவருமே உயர்சாதிக்காரர்களாக மட்டுமின்றி, அதன் மூலம் அளப்பரிய வாய்ப்புகளைப் பெற்று உயர்ந்தவர்களாக உள்ளனர் என்பது ஒரு யதார்த்தம். உண்மையிலேயே இவர்கள் சாதியைக் கடந்தவர்களாக இருக்கும் பட்சத்தில் நாம் தலை வணங்கலாம்.

ஆனால், இப்படி பொய் வேஷம் போடுவதால் தான் பாஜகவிற்குள்ளேயே பார்ப்பன எதிர்ப்பு தற்போது அங்குமிங்குமாக மேலெழுந்து வருகிறது.

கர்நாடகாவில் தார்வார்ட் தொகுதியை, ”பார்ப்பனரான பிரகலாத் ஜோசிக்கு தரக் கூடாது” என கொந்தளித்துள்ளனர் பாஜகவில் இருக்கும் லிங்காயத்து சமூகத்தினர்! இந்த சமூகத்தின் ஆன்மீக மடத்து சாமியார்கள் இந்த பிராமண அமைச்சரை கடுமையாக எதிர்க்கிறார்கள்! காரணம், ”பிற சமூகத்தார்களைக் கடுகளவும் மதிக்காமல் அவர் அடக்கி ஆள்கிறார். எடியூரப்பா முதல்வராக இருந்த போது அவரையே கட்டுப்படுத்தினா” எனச் சொல்கிறார்கள்!

உத்திரபிரதேசத்தின் சுவாமி பிரசாத் மௌரியா வைக்கும் குற்றச்சாட்டு அதிர்ச்சி ரகம்; பாஜகவானது இந்து மதத்தை, பிராமண மதமாக்கப் பார்க்கிறது. இதன் மூலம் இந்து மதத்தில் உள்ள 90 சதவிகித இந்துக்களை – அதாவது பெரும்பான்மை மக்களை – இழிவுபடுத்துகிறது...” என்கிறார்!

நமது நாடு சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து நமது நாட்டை பெருமளவில் பிராமணப் பிரதமர்களும், முதல்வர்களுமே ஆட்சி செய்து வந்தனர் என்பதே வரலாறு! அந்த வரலாற்றை மாற்ற முன்முயற்சி எடுத்தவரும் மொரார்ஜி தேசாய் என்ற பிராமணப் பிரதமர் தான். மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்படுத்தும் பேச்சை அவர் எடுத்தவுடன், அன்றைய ஜனதாவுக்குள் இருந்த ஜனசங்கம் அவரை பதவி இறக்கம் செய்தது. அதன் பிறகு 10 ஆண்டுகள் கழிந்த நிலையில் வி.பி.சிங் அவர்கள் தான் அந்த புரட்சியை செய்தார். இதன் மூலம் சாதி வெறிப் பார்ப்பனர்கள் அவரது எதிர்காலத்தை சூனியமாக்க முடிந்ததே அன்றி, அவர் ஏற்படுத்திய விளைவுகளை அவர்களால் தடுக்க முடியவில்லை.

மண்டல் கமிஷன் தான் உ.பியின் கடைசி முதல்வர் என நாராயண்தத் திவாரியோடு (1989) பிராமண முதல்வர்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

உ.பி மட்டுமல்ல, மத்திய பிரதேசத்தில் சியாம் சரண் சுக்லா, பீகாரில் ஜெகன்நாத் மிஸ்ரா (1990), ராஜஸ்தானில் ஹரிதேவ் ஜோஸி (1990) என பார்ப்பன முதல்வர்களுக்கு முடிவுரை எழுதியது.

அதன் பிறகு தான் முலாயம் சிங் யாதவ், லல்லு பிரசாத் யாதவ், மாயாவதி, நிதிஸ்குமார், தேவகவுடா, தேவிலால், சிவ்ராஜ் சிங் சௌகான், அசோக் கெலாட் போன்ற பார்ப்பனரல்லாத தலைவர்கள் அந்த மாநிலங்களில் மேலெழுந்து வந்தார்கள்! பாஜகவே உ.பி. முதல்வராக பார்ப்பனரல்லாத கல்யாண்சிங்கை பதவியேற்கச் செய்யும் கட்டாயத்திற்கு தள்ளப்பட்டது.

கட்சியையையும், ஆட்சியையும் பாஜக எதற்காக நடத்தி வருகிறதோ.., அந்த நோக்கத்தை தற்போது வெளிப்படையாக செயல்படுத்த தொடங்கிவிட்டது. பாஜக என்ற கட்சியிலும், அதன் ஆட்சியிலும் பார்ப்பனர் – பனியாக்களின் ஆதிக்கத்தின் யதார்த்தமான கட்டமைப்பை சுட்டிக் காட்டுவதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

## பாஜகவின் ஆட்சியில் பிராமணர்கள்;

மோடியின் முதல் அமைச்சரவையில் சுஸ்மா சுவராஜ், நிதின்கட்காரி உள்ளிட்ட 9 பிராமணர்கள் இருந்ததனர். இரண்டாவது அமைச்சரவையில் நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர் உள்ளிட்ட பலருமென இது வரை 21 பிராமணர்கள் மத்திய அமைச்சர் வாய்ப்பை பெற்றுள்ளனர்.

தற்போது பல மாநிலங்களிலும் பிராமணர்களை முதல்வர் அல்லது துணை முதல்வர் என நியமித்துக் கொண்டுள்ளது பாஜக;

அஸ்ஸாமில் ஹிமந்த பிஸ்வா சர்மா ஒரு பிராமண முதல்வர், ஹரியானாவில் சென்ற மாதம் 12 ஆம் தேதி வரை ஒன்பதரை ஆண்டுகளாக முதல்வராக இருந்தவர் மனோகர்லால் காட்டியா ஒரு பிராமணர்!

கோவாவில் பிராமணரான மனோகர்லால் பாரிக்கர் இரண்டு முறை முதல்வராக்கப்பட்டார். (தற்போது உயிருடன் இல்லை)

திரிபுராவில் 2018 முதல் 2022 வரை முதல்வராக இருந்த பிப்லப் குமார்தேவ் ஒரு பிராமணர். தற்போது மத்திய பிரதேசத்தின் துணை முதல்வர் ராஜேந்திர சுக்லா பிராமணர்! மகாராஷ்டிராவில் துணை முதல்வர் தேவேந்திர பட்னாஸ் ஒரு பிராமணர்! இதற்கு முன்பு முதல்வராகவும் வாய்ப்பு பெற்றார். உத்திரபிரதேசத்தில் பிராமணரான பிரதேஷ் பதக் துணை முதல்வர். சட்டிஸ்கரில் பிராமணரான விஜய் சர்மா துணை முதல்வர். இது தவிர பாஜகாவால் ஆளுநர்களாக்கப்பட்ட பிராமணர்களின் பட்டியல் தனி!

முதல்வராகவோ, துணை முதல்வராகவோ வாய்ப்பில்லாத பீகார் போன்ற மாநிலத்தில் மங்கல் பாண்டே, நிதின் மிஸ்ரா (முன்னாள் முதல்வர் ஜெகன் நாத் மிஸ்ரா மகன்) போன்ற பிராமணர்கள் அதிகாரமிக்க அமைச்சர்களாக உள்ளனர்.

ஒரு சிலர் கேட்கலாம். ஏன் திறமையாளர்களை பயன்படுத்துவதில் என்ன தவறு..? மேற்படியாக சொல்லப்பட்டவர்களில் எவருமே திறமைசாலிகள் என்பதாகவோ, நல்லாட்சி தந்ததாகவோ பாராட்டு பெறவில்லை. ராஜஸ்தான் முதல்வராக தற்போது நியமிகப்பட்டுள்ள பஜன்லால் சர்மா தற்போது தான் முதல் முறை ராஜஸ்தானின் எம்.எல்.ஏ ஆகியுள்ளார். தேர்தலுக்கு முன்பு கூடிய பிராமண மஹா சபா இவருக்கு முதல்வர் பதவி தர வேண்டும் என கட்டளையிட்டதால் வழங்கப்பட்டுள்ளதாம். ஆக, அனுபவமோ, திறமையோ அவர் முதல்வர் வாய்ப்பு பெற்றதற்கு காரணமில்லை என்பது வெளிப்படையான உண்மையாகும்.

## பாரதிய ஜனதா கட்சியில் பார்ப்பனர் ஆதிக்கம்

பாஜகவின் அகில இந்தியத் தலைவர் ஜே.பி. நட்டா ஒரு பிராமணர். இதேபோல இந்த மாநிலத்தின் கட்சித் தலைவர் சி.பிஜோஸியும் ஒரு பிராமணரே! பல மாநிலங்களில் பிராமணர்களே பாஜகவின் மாநிலத் தலைவர்களாகவும் உள்ளனர். தற்போது இந்திந்த மாநிலங்களில் பிராமணத் தலைவர்கள் இல்லையே எனச் சிலர் சொல்லலாம். அந்த மாநிலங்களில் முன்பு இருந்திருக்கலாம். தற்போது தற்காலிகமாக பின்னிருந்து ஆட்டுவிக்கக் கூடியவர்களாக பிராமணர்கள் இருப்பார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தமிழகத்திலே முன்பு இல.கணேசன் என்ற பிராமணர் தலைவராக இருந்தார். தற்போது கே.டி.ராகவன், ஹெச். ராஜா, கேசவ விநாயகம்.. போன்றவர்களே அண்ணமலையை பின்னிருந்து இயக்கி வருகிறார்கள்!

பாஜகவின் கட்சிக் கட்டமைப்பில் எந்தெந்த சாதிக்கு எவ்வளவு பேர் என தி பிரிண்ட் இதழ் 2018 ஆம் ஆண்டு ஒரு புள்ளிவிரம் தந்தது! அதில் தற்போது பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுவிடவில்லை என்பதால் அதில் ஒரு சிலவற்றை இங்கே தருகிறேன்.

பாஜகவின் தேசிய அலுவலக பொறுப்பாளர்கள் 50 பேரில் 17 பேர் பிராமணர்கள்! மற்ற உயர்சாதியினர் 21. இவை தவிர மற்ற 12 தாம், 75 சதவிகித மக்களை பிரதிபலிக்கும் சாதிகளுக்கு தரப்பட்டுள்ளன. தேசிய எக்ஸ்கியூடிவ்கள் 97 பேரில் 29 பிராமணர்களுக்கும், 37 மற்ற உயர் சாதியினருக்கும் தரப்பட்டுள்ளன!

அதே சமயம் பெரிய எண்ணிக்கை கொண்ட சாதிகளுக்கும் சில பிரதிநிதித்துவம் அங்குமிங்குமாக வழங்கப்பட்டு முடிந்தவரை அதிருப்திகள் அதிகம் தலை தூக்காமல் பார்த்துக் கொள்கிறார்கள்! சாதித் தலைவர்களின் ஆசை, அபிலாஷைகளை துல்லியமாகக் கணித்து சதுரங்க வேட்டையாடி வருகின்றனர்.

இதற்கு தமிழ் நாட்டில் வன்னியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாமக என்றால், உ.பி போன்ற மாநிலங்களில் குர்மிக்களை பிரதி நிதித்துவப்படுத்தும் அப்னாதளம் போனறவற்றை சொல்லலாம். இவர்கள் தாம் சாதிகளே கிடையாது என்றும் சொல்வார்கள். ஹரியானா முதல்வராக பிராமணரான மனோகர்லால் காட்டியா பதவி ஏற்ற போது சொன்னார். ”ஹரியாணாவில் சாதியே கிடையாது. இது ஒவ்வொருவருக்குமான அரசு” என்றார்! அவருடைய ஆட்சியில் தலித்துகளும், இஸ்லாமியர்களும் வரலாறு காணாத கொடுந்துன்பத்திற்கு ஆளானதை சமீபத்திய வரலாறு சொல்கிறது.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கழகத் தோழர் இளவரசனுக்கு பாராட்டு விழா




தமிழ்நாடு புதுச்சேரி பார் கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்திருக்கும் வட சென்னை கழகத் தோழர் இளவரசனுக்கு பாராட்டு விழாவானது 19.07.2024 அன்று சேத்துப்பட்டு சமூக நலக் கூடத்தில் சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி தலைமையில் நடைபெற்றது..

நிகழ்விற்கு சிகாமணி, தனசேகர், தட்சிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட சென்னை மாவட்ட அமைப்பாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன் வரவேற்புரையாற்றினார்.

கழகத் தோழர் அருள்தாஸ் பெரியார் - அம்பேத்கர் பாடல்களை பாடினார்.

இதில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி, கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், மாவட்டத் தலைவர் வேழவேந்தன், வட சென்னை மாவட்ட அமைப்பாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன், விசிக மையச் சென்னை (கி) மாவட்டச் செயலாளர் பி.சாரநாத், விசிக மையச் சென்னை (வ) மாவட்டச் செயலாளர் இளங்கோ, மக்கள் அதிகாரம் காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

பா.இராஜன் நன்றி கூற நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது..

இந்த இனிய நிகழ்வில் கழகத் தோழர்கள் - உறவினர்கள் - சட்டக் கல்லூரி மாணவர்கள் திரளாக கலந்து கொண்டு தோழர் இளவரசனை வாழ்த்தினர்..

முன்னதாக சேத்துப்பட்டு அம்பேத்கர் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர், பண்டித அயோத்திதாசர், இரட்டைமலை சீனிவாசன் ஆகியோரது சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் அண்மையில் சமூக விரோதக் கும்பலால் படுகொலை செய்யப்பட்ட பகுஜன் சமாஜ் கட்சி மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் அவர்களின் படத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்து புகழ் வணக்கம் செலுத்தினார்..

# அப்பட்டமான மதவெறி!

ஒவ்வொரு ஆண்டும் சிவபக்தர்கள் டெல்லியில் இருந்து ஜூலை மாதத்தில் முதல் உத்தரப்பிரதேசம் வழியாக உத்தரகாண்ட் மாநிலம் கங்கோத்திரிக்கு ஆன்மீகப் பயணம் மேற்கொள்கிறார்கள். லட்சக்கணக்கான பக்தர்கள் செல்லும் இந்தப் பயணத்தை கான்வார் யாத்திரை என்று அழைக்கிறார்கள். இந்த பக்தர்கள் வசதிக்காக அவர்கள் செல்லும் வழியில் பலர் தற்காலிக உணவு மையம் அமைப்பது வழக்கம். இந்த முறை அப்படி உணவு கூடம் அமைப்பவர்கள் தங்கள் உரிமையாளரின் பெயர், முகவரி, செல்போன் ஆகியவற்றை கடைகளில் நன்றாக தெரியும்படி, கடை போர்டுகளில் எழுத வேண்டும் என்று உபி மாநிலம் முசாபர்நகர் போலீசார் அறிவுறுத்தி இருந்தனர்.

பயணம் செல்லும் வழியில் இசுலாமியர்கள் அதிகம் வசிக்கின்றனர். அதனால் இயல்பாகவே இசுலாமியர்களின் கடைகளோ அல்லது, கடைகளில் பணிபுரிபவர்கள் இசுலாமியர்களாகவோ இருக்க வாய்ப்புகள் அதிகம். சிவபக்தர்கள் அத்தகைய கடைகளை தவிர்க்க வேண்டும் என்கிற உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டமிட்ட நோக்கத்தோடு இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக கண்டனங்கள் எழுந்தன. அகிலேஷ் யாதவ், மாயாவதி உள்ளிட்டோர் மட்டுமின்றி, ஒன்றிய அரசில் அமைச்சராக இருக்கும் சிராக் பஸ்வான், கூட்டணியில் முக்கிய அங்கம் வகிக்கும் நிதிஷ் குமார் போன்றோரும் கடுமையாகக் கண்டித்துள்ளனர். திட்டமிட்டு கலவரத்தை ஏற்படுத்தும் சதிச்செயல் இதில் இருப்பதாக கண்டனங்கள் எழுந்தன. உத்திரப்பிரதேச அரசைப் பார்த்து, உத்தராகண்ட் அரசும் இந்த உத்தரவை விதித்தது.

இது தொடர்பாக உச்சநீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், உத்திரப்பிரதேசம், உத்தராகண்ட் மாநில அரசுகளின் முடிவுக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆன்மீகத்தின் பெயரால் மதக்கலவரத்தை தூண்டும் பாஜக அரசின் சதி அம்பலமாகி, சாமியார் யோகி ஆதித்யநாத்தின் முகத்திரை கிழிந்திருக்கிறது.

# நங்கவள்ளி நகரக் கழகக் கலந்துரையாடல் கூட்டம்

நங்கவள்ளி நகரக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 22.07.2024 அன்று நங்கவள்ளியில் உள்ள அ.செ.சந்திரசேகரன் இல்லத்தில் மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் தலைமையில் நடைபெற்றது.

சேலம் (மே) மாவட்ட அமைப்பாளர் அ.அண்ணாதுரை, சேலம் (மே) மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ.அன்பு, மே.கா.கிட்டு, கொளத்தூர் ராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் இயக்க வளர்ச்சி குறித்தும், புதிய தோழர்களை இயக்கத்திற்கு சேர்ப்பது, சந்தா சேர்ப்பு மற்றும் மாதாந்திர கலந்துரையாடல் கூட்டம் நடத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடல் கூட்டத்தில் நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் கிருஷ்ணன், நங்கவள்ளி நகரச் செயலாளர் பிரபாகரன், அ.செ.சந்திரசேகரன், அருள்குமார், ரமேஷ், ரவிக்குமார், பேரறிவாளன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு!

நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதுக்கு நாற்பது தோல்வியை பரிசாகக் கொடுத்த தமிழர்கள் மீதும், தமிழ்நாட்டின் மீதும் பாஜக கொண்டிருக்கிற கோபத்தை தெள்ளத்தெளிவாக வெளிக்காட்டியிருக்கிறது 2024 - 25 நிதியாண்டுக்கான ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை. ஜூலை 23ஆம் தேதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில், ஒரு வார்த்தை கூட தமிழ் என்றோ, தமிழ்நாடு என்றோ இடம்பெறவில்லை. மாறாக, ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகரை உருவாக்க ரூ.15,000 கோடி, கோப்பர்த்தியில் தொழில் முனையம் என ஆந்திராவுக்கு நிதிநிலை அறிக்கையில் முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. அதேபோல பீகாரில் நெடுஞ்சாலைகளை மேம்படுத்த ரூ.26,000 கோடி, வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 11,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாஜகவின் ஆட்சியை கவிழாமல் இருபுறமும் தாங்கிப் பிடிக்க, சந்திரபாபுவுக்கும், நிதிஷ் குமாருக்கும் தரப்பட்ட முக்கியத்துவமே தவிர, அம்மாநில மக்களின் நலன் மீது கொண்ட அக்கறை அல்ல இது என்பது தெளிவாகிறது.

உண்மையில் மக்களின் நலனில் அக்கறை கொண்ட அரசாக இருந்திருந்தால் கலவரத்தால் உருக்குலைந்து நிற்கும் மணிப்பூருக்கு திட்டங்களை தீட்டியிருக்க வேண்டும். ஆனால் தமிழ்நாட்டைப் போல மணிப்பூர் என்ற வார்த்தையும் நிதிநிலை அறிக்கையில் இடம் பெறவில்லை. சென்னையின் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் பணிகளுக்கு ஒதுக்கீடு இல்லை. கோவை மற்றும் மதுரை நகரங்களுக்கான மெட்ரோ ரயில் திட்டங்கள் குறித்த எந்த அறிவிப்பும் இல்லை. தமிழ்நாட்டுக்கென புதிய ரயில் திட்டங்களோ, நெடுஞ்சாலைத் திட்டங்களோ இடம்பெறவில்லை. கடந்த ஆண்டு இறுதியில் தமிழ்நாடு சந்தித்த 2 பேரிடர்களுக்கும் நிதி இல்லை. பாஜகவின் மதவாதத்தை தமிழ்நாடு உறுதியாக எதிர்த்து நிற்கிறது என்பதுதான் இந்த புறக்கணிப்புக்கு காரணமா என கேள்வி எழுப்பியிருக்கிற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ஒன்றிய அரசின் நிதி ஆயோக் கூட்டத்தை புறக்கணிப்பதாக அறிவித்திருக்கிறார். அவரைப் பின்தொடர்ந்து கருநாடகா, தெலங்கானா மாநில முதலமைச்சர்களும் நிதி ஆயோக் கூட்டத்தை புறக்கணிக்கப்பதாக அறிவித்துள்ளார்கள்.

ஒன்றிய அரசின் பாகுபாட்டுக்கு எதிராக, தென் மாநிலங்களின் இந்த ஒருமித்த குரல் வலுப்பெற வேண்டிய அவசியம். செல்லுமிடமெல்லாம் தமிழ், தமிழ் எனப் பேசி தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்க்கிறார் எனக்கூறும் தமிழ்நாட்டு பாஜகவினர், ஏன் தமிழ்நாட்டுக்கு எந்தத் திட்டமும் கொண்டுவரவில்லை என்ற கேள்விக்கும் பதில் சொல்ல முன்வர வேண்டும்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP

Posted : July 26, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran